**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, ADDITIONAL DISTRICT COURT, SIVAGANGAI.**

Sessions
Deposition of witness for } **Case No. SC 34/2025**

**Prosecution : PW.4**

| | | |
|---|---|---|
| **Name** | : | திரு.பாலமுருகன் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**05.02.2026**

**எதிரி ஆஜர் படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை:**

நான் நல்லாகுளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் 100 நாள் வேலையில் எழுத்தராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனக்கு பக்கத்து ஊர்காரர். 4.11.2024ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில், நான் நல்லாகுளம் பக்கத்தில் உள்ள உப்பாறு பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன். அப்போது பூவந்தி காவல் நிலைய சார்பு ஆய்வாளரும், அவருடன் இரண்டு, மூன்று போலீஸ்காரர்களும் வந்தார்கள். என்னுடன் படமாத்தூரை சேர்ந்த கவியரசு என்பவரும் இருந்தார். குண்டுமணிக்கும், பாலு என்பவருக்கும் சண்டை என்று விசாரிக்க வந்தார்கள். அவர்கள் இடத்தை பார்த்து வரைபடம் தயார் செய்தார்கள். அவர்கள் நாங்கள் வந்ததற்கு சாட்சி கையெழுத்து போடுகிறீர்களா என்று கேட்டார்கள். எல்லாத்தையும் எழுதினார்கள். படமாத்தூர் கவியரசு முதலில் சாட்சி கையெழுத்து போட்டார். நான் 2வதாக சாட்சி கையெழுத்து போட்டேன். பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜர் **அசாஆ.2.**

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.02.05 18:52:49 +0530

போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

என் ஊரிலிருந்து உப்பாறு 3 கி.மீ தூரம். அங்கு எதற்கு போனேன் என்றால் சும்மா போனேன். நான் நடக்க முடியாத நிலையில் இன்று நீதிமன்றம் ஆஜராகி இருக்கிறேன் என்றால் சரிதான். பார்வை மகஜர் தயார் செய்த இடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் என்றால் நான் தான் அடையாளம் காண்பித்தேன். அந்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். பார்வை மகஜரில் என்னனென்ன இருக்கிறது என்று எழுதியிருப்பது நான் சொல்லித்தான் எழுதினார்கள் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் பாலம் இருக்கிறது என்றால் சரிதான். அந்த பாலத்தை வரைபடத்தில் காண்பித்து இருக்கிறார்கள் என்றால் சரிதான். எனக்கு எஸ்.ஐ-க்கும், இன்ஸ்பெக்டருக்கும் வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். கவியரசு என்பவர் எதற்கு அங்கு வந்தார் என்றால் அவருக்கு அங்கு விவசாயம் இருக்கிறது. போலீசார் விசாரணையில் நான் கவியரசு விவசாயத்தை பார்க்க வந்தார் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. போலீசார் என் முன்பு வரைபடம் தயார் செய்யவில்லை என்றும் சாட்சி பாலுவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானோ, சாட்சி கவியரசு நான் சொன்ன நேரத்தில் அந்த இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. கையெழுத்து போலீஸ் ஸ்டேசனில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை.**

P PARTHASARATHY

Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.02.05 18:52:59 +0530